# கடலூர் மாவட்ட கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : **திரு.வா.பரணிதரன், B.Com.,**

ந.க.எண்.7804/2020/ஈ2 நாள்: 13.12.2021

பொருள் : பணியமைப்பு – கருவூலம் மற்றும் கணக்குத் துறை, கடலூர் மாவட்ட கருவூல அலகு – திரு.S.பரணிதரன், இளநிலை உதவியாளர், சார்நிலைக் கருவூலம், சிதம்பரம் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.18541/2020/சி3 நாள்: 31.07.2020.
2. கருவூல அலுவலர், கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.7804/2020/ஈ2 நாள் 10.08.2020.
3. மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்.

----------

சார்நிலைக் கருவூல அலுவலகம் 966 13 DEC 2021 சிதம்பரம் 608 001

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்திய, 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான தொகுதி - IV பணிகளுக்கான தேர்வு மூலம் கருவூலக் கணக்கு துறைக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை 1-இல் காணும் ஆணையர், கருவூலக் கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, கடலூர் மாவட்ட கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு சார்நிலைக் கருவூலம் சிதம்பரம் அலுவலகத்தில 10.08.2020 முற்பகல் அன்று இளநிலை உதவியாளராக பணியேற்ற திரு.S.பரணிதரன், அவர்களது பணி, இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான **10.08.2020 முற்பகல்** முதல் தமிழ்நாடு மாநிலம் மற்றும் சார்நிலைப் பணிகள் பொதுவிதி 23(அ)(i)-ன்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறையானது 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான தொகுதி - IV தேர்வு தொடர்பாக உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை கிளை ஆகியவற்றில் நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுக்கு உட்பட்டது என அறிவிக்கலாகிறது.

மேற்கண்ட பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர்பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை நிறைவான வகையில் முடித்திட வேண்டும் என அறிவிக்கலாகிறது.

கருவூல அலுவலர்,
கடலூர்.

13/12/21

<u>பெறுநர்:</u>

திரு.S.பரணிதரன், இளநிலை உதவியாளர், சார்நிலைக் கருவூலம், சிதம்பரம்.(உரிய வழியாக)

<u>நகல்:</u>

உதவி கருவூல அலுவலர், சார்நிலைக் கருவூலம், சிதம்பரம்.(பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டு).